# தொகுதிப் பங்கீடு: தி.மு.க. - ஆதித் தமிழர் பேரவை உள்ளிட்ட 8 கட்சிகள் பேச்சுவார்த்தை!








**சென்னை, மார்ச். 4 -**

**2026 சட்டப் பேரவை தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான தி.மு.க. குழுவினர் நேற்று முன்தினம் (02.03,2026) அண்ணா அறிவாலயத்தில் 8 தோழமைக் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.**

**இந்த பேச்சு வார்த்தையில்**

**ஆதித் தமிழர் பேரவை சார்பில்**

இரா,அதியமான்
(நிறுவனத் தலைவர்)
இரவிக்குமார் (பொதுச் செயலாளர்)
அ.முத்துகிருஷ்ணன்
(மாநில அமைப்புச் செயலாளர்)
சந்திரன் (துணைப் பொதுச் செயலாளர்) ஆகியோருடனும்,

**வல்லரசு பார்வர்டு பிளாக் சார்பில்**

பி.என்.அம்மாவாசித்தேவர்
(நிறுவன தலைவர்)
ஈ.சந்திரசேகரன்
(பொதுச் செயலாளர்)
கருப்பதேவர்
எம்.முருகானந்தம், ஆகியோருடனும்,

**ஆதித் தமிழர் கட்சி சார்பில்**

கு.ஜக்கையன்
(தலைவர்)
விஸ்வை குமார்
(பொதுச் செயலாளர்)
க.திலீபன்
(அமைப்புச் செயலாளர்)
விடுதலைக் குமார்
(மாநில ஆலோசகர்)
திருமுருகச் செல்வம் (துணைப் பொதுச் செயலாளர்) ஆகியோருடனும்,

**தமிழ்ப் புலிகள் கட்சி சார்பில்**

நாகை, திருவள்ளுவன் (தலைவர்)
பேரறிவாளன் (பொதுச் செயலாளர்)
இளவேனில் (பொதுச் செயலாளர்)
சிறுத்தை செல்வன் (பொருளாளர்)
முத்துக்குமார் (செய்தி தொடர்பாளர்)
ராமச்சந்திரன் (துணை பொதுச் செயலாளர்) ஆகியோருடனும்,




**புதிய திராவிட கழகம் சார்பில்**

எஸ்.ராஜ்குமார் (தலைவர்)
ரவிச்சந்திரன்
(கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர்)
ஆர்.இம்மானுவேல் நாடார்
(மாநில அமைப்பு செயலாளர்)
சந்தோஷ் (கரூர் மாவட்டச் செயலாளர்)
காடையார் சரவணன் (மாநில பொருளாளர்) ஆகியோருடனும்,

**தமிழர் தேசம் கட்சி சார்பில்**

கே.கே.செல்வகுமார் (தலைவர்)
தளவாய் ராஜேஷ் (பொது செயலாளர்)
குரு.மணிகண்டன் (ஒருங்கிணைப்பாளர்)
எம்.ராஜேந்திரன் (இணை பொதுச் செயலாளர்)
கௌதம் (ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருடனும்,

**அகில இந்திய பசும்பொன் முன்னேற்றக் கழகம் சார்பில்**

ஏ.எம்.மூர்த்தி
பி.மணிகண்டன்
எஸ்.கதிர்
ஆர்.ஆரோன்
எஸ்.கே.உதயன் ஆகியோருடனும்,

**திராவிடத் தமிழர் கட்சி**

வெண்மணி (தலைவர்)
நெல்லை கதிரவன்
(பொதுச் செயலாளர்)
விஜயகுமார்
(தலைமை நிலைய செயலாளர்)
இள.கார்த்திகேயன்
(மாநில இளைஞரணி செயலாளர்)
ரங்கராஜ் (இளைஞர் அணி இணைச் செயலாளர்)
இரா.செந்தில்குமார் (மேற்கு மண்டல அமைப்பு செயலாளர்) ஆகியோருடனும் பேச்சு வார்த்தை நடத்தினர்.

## சட்டமன்றத் தேர்தல் :

# 12 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!






சென்னை, மார்ச் 4 -

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

12 வது நாளாக நேற்று (3.3.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப் பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

12வது நாளான நேற்று (03.03.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டீன், கழக தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி. செல்வராஜ் ஆகியோர் பெற்றனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக திரண்டு வந்து விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 6ஆம் தேதி வரை நடை பெறுகிறது.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நங்கநல்லூரில் DMI தமிழ்நாடு பெண்கள் கூட்டமைப்பு நடத்திய மகளிர் தின விழாவில் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துக்கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கி, கலை நிகழ்ச்சிகளை கண்டு ரசித்து, பரிசுகள் வழங்கி, வாழ்த்து கூறி உரையாற்றினார். அருகில் மண்டலக் குழுத் தலைவர் என். சந்திரன், வட்டச் செயலாளர்கள் நடராஜன், உலகநாதன், ஜேசுதாஸ், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் விஜயலட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாசியுடன் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மீனாம்பாள் சிவராஜ் நகர் (எம்.எஸ்.நகர்) சேத்துப்பட்டு திட்டப்பகுதி 240 பயனாளிகளுக்கு குடியிருப்பு வழங்கும் விழா சென்னை சேத்துப்பட்டில் உள்ள மலையாளி கிளப் மஹாலில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத் தலைவர் பி.கே.சேகர்பாபு 240 பயனாளிகளுக்கு குடியிருப்பு ஆணையையும், நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில் பகுதி கழகச் செயலாளர் வி சுதாகர், கூ.பீ.ஜெயின், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, எல் சுந்தர்ராஜன், குணசேகரன், குறளரசன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.